**O.S. No. : 01/2016**

Dated: 19.06.2026

**பி.வா.சா.3: மகேந்திரகுமார்; த/பெ. முருகேசன்**

**<u>8 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. வாதி எந்த தேதியில் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பம் கொடுத்தார் என்றால் 20.08.2014 அன்று கொடுத்தார். எப்போது நகராட்சியால் வாதிக்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டது என்றால் 06.11.2015 அன்று அனுமதி வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட அனுமதி எப்போது ரத்து செய்யப்பட்டது என்றால் 14.06.2016 அன்று ரத்து செய்யப்பட்டது. எதன் அடிப்படையில் கட்டிட அனுமதி ரத்து செய்யப்பட்டது என்றால் லிங்கன் என்பவர் கொடுத்த மனுவின் அடிப்படையில் ரத்து செய்யப்பட்டது.

2. லிங்கன் தனது மனுவுடன் ஆவணம் எதுவும் கொடுத்தாரா என்றால் கொடுத்தார், செட்டில்மண்ட் பத்திரத்தை ரத்து செய்த ஆவணத்தின் நகல் அனுப்பப்பட்டது. நகராட்சி சட்டப்படிதான் கட்டிட அனுமதியை ரத்து செய்துள்ளது என்றால் சரிதான். எங்களது பதிவுகளின்படி வாதி வழக்கு சொத்தில் வீடு எதுவும் கட்டவில்லை என்றால் சரிதான். எங்கள் அலுவலக பதிவுகளின்படி வாதிக்கு கதவு எண் மற்றும் சொத்து வரி எண் ஆகியவை வழங்கப்படவில்லை என்றால் சரிதான், புதிய கட்டிடத்திற்கு கதவு எண் மற்றும் வரி விதிப்பு எண் வழங்கப்படவில்லை, ஆனால் வாதி ஏற்கனவே உள்ள கட்டிடத்தை இடித்து புதிய கட்டிடம் கட்ட அனுமதி கோரியுள்ளார்.

3. ஏற்கனவே உள்ள கட்டிடத்தின் வரி விதிப்பு எண் வாதியின் தகப்பனார் லிங்கன் என்பவர் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். நகராட்சி நிர்வாகம், வாதிகக்கோ, பிரதிவாதிகளுக்கோ ஆதரவாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

**(வேண்டுகோளின் பெயரில் வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2026.06.19 18:21:39 +0530